**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**ஜனவரி–பிப்ரவரி 2022**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. தேவகுமாரன் என்பவர் யார்?
2. வேதநாயகம் பிள்ளை பிறந்த ஊர் எது?
3. மக்கள் வாழ்வில் சிறப்பிடம் பெறுவது எது?
4. திருக்குறள் எந்த பாவகையைச் சார்ந்தது?
5. வடக்கிலிருந்து வீசும் காற்றின் பெயர் என்ன?
6. திணை என்ற சொல்லின் பொருள் யாது?
7. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு என்ன?
8. 'உலக வாழ்த்து' பாடல் இடம் பெற்ற நூல் எது?
9. பாக்கள் எத்தனை வகைப்படும்?
10. மெய்யெழுத்தினை ஒலிப்பதற்கு உரிய கால அளவு என்ன?

**பிரிவு – 2**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. கல்லணை எந்த ஆற்றின் குறுக்கே யாரால் கட்டப்பட்டது?
2. சொல் என்பது யாது?
3. காவிரி ஆறு, தமிழகத்தின் எப்பகுதிகளை வளப்படுத்துகிறது?
4. குற்றாலத்தில் உள்ள அருவிகள் யாவை?
5. மழை பெய்வதற்கான அறிகுறிகள் என்னென்ன?
6. நெடுஞ்செழியனைப் பாடிய புலவர்களின் பெயர்களைத் தருக.
7. தமிழின் தனிச்சிறப்பு யாது?
8. கண், கால் இவற்றுக்கு வனப்பாவன யாவை?
9. செய்யுளை எழுதும்போது கவனத்தில் கொள்ள வேண்டுவன யாவை?
10. தமிழ்நாடு யாரை எல்லாம் வாழ்விக்கிறது?

11. முல்லை நில மக்களுக்குரிய தொழில்கள் யாவை?
12. எண்ணுப்பெயர்கள் மூன்றனைக் கூறுக.
13. அன்றே ஒழியவிட வேண்டியது எது?
14. மாத்திரை என்றால் என்ன?
15. புணர்ச்சி என்றால் என்ன?

### பிரிவு – 3

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. நான்மணிக்கடிகை – இச்சொல்லின் பொருளை எழுதுக.
3. இளங்கோவடிகள்குறிப்பு வரைக.
4. கலம்பகம் என்றால் என்ன?
5. அணி என்றால் என்ன? பிறிதுமொழிதலணியை விளக்குக.
6. பெண்களால் முன்னேற முடியும் என்பதை பெண்கல்வி பாடல் மூலம் பாரதிதாசன் எவ்வாறு விளக்குகிறார்?
7. வானூர்திகள் குறித்து ரைட் சகோரதரர்கள் எடுத்த முயற்சிகளை எழுதுக.
8. 'சினம் விடுக' – என நான்மணிக்கடிகை கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

### பிரிவு – 4

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. குற்றால அருவிகளின் அழகு குறித்து எழுதுக.
2. புகழ் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
3. எட்டுவகை பொருள்கோள்களை விளக்கி வரைக.

### பிரிவு – 5

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. மணி கண்ட கனவுகளைத் தொகுத்தெழுதுக..
2. வேற்றுமை உருபுகள், அறுவகைப் பெயர்களை எழுதி, விளக்கம் கொடுத்து சரியான உதாரணம் தருக.

******